OS.100/2022
நாள். 21.08.2025
வா.சா.1 – ரங்கராஜன்
<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான்மொத்தம் 11 இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தில் அருணா ஸ்டோர்ஸ் என்ற கடை இயங்கி வருகிறது என்றால் சரிதான். அருணா ஸ்டோரை முதன் முதலில் யார் ஆரம்பித்தது என்றால் சீனிவாசன் செட்டியார், வேணுகோபால் செட்டியார். எந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 70 வருடங்களுக்கு முன்னால். சீனிவாசன் செட்டியார், வேணுகோபால் செட்டியார் இருவரும் சேர்ந்து அருணா ஸ்டோரை ஆரம்பித்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. சீனிவாசன் செட்டியார் பெயரில்தான் உள்ளது. பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜன், கோவிந்தராஜனின் அப்பா சீனிவாசன் செட்டியார் என்றால் சரிதான். அருணா ஸ்டோரை பிரதிவாதியின் பாட்டனார் சீனிவாசன் தான் தொடங்கி நடத்தி வந்தார் என்றும் என் தகப்பனார் வேணுகோபால் செட்டியார் சீனிவாசனுடன் சேர்ந்து தொடங்கி நடத்தி வரவில்லை என்றால் சரியல்ல. 1ம் இலக்க சொத்து சீனிவாசன் செட்டியார், வேணுகோபால் செட்டியார் மற்றும் அவரது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர்களுடைய குடும்ப சொத்துக்களை பொறுத்து 06.10.1983 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் மூலம் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தில் 1வது இலக்க சொத்து யாருக்கு ஒதுககப்பட்டது என்றால் எனக்கும் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜனுக்கும் ஒதுக்கப்பட்டது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் அருணா ஸ்டோர் எனக்கும் கோவிந்தராஜனுக்கும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, 1ம் இலக்க சொத்து மட்டுமே எனக்கும் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜன் 2004 ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு கோவிந்தராஜன் மகனான பிரதிவாதி சுசீந்திரன் 1ம் இலக்க

சொத்தில் உள்ள அருணா ஸ்டோரை நடத்தி வருகிறார் என்றால் நான் அவரை அவரது தகப்பனார் இறந்த பிறகு ஒரு பார்ட்னராக சேர்த்துக்கொண்டேன். பிரதிவாதியின் தகப்பனார் இறக்கும்வரை கோவிந்தராஜன் தான் அருணா ஸ்டோரை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல, நானும், அவரும் சேர்ந்து நடத்தி வந்தோம். எனக்கும் பிரதிவாதிக்கும் தகராறு ஏற்படுவதற்கு முன்பு அருணா ஸ்டோருக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் நிகர லாபமாக வருடத்திற்கு ரூ.10 இலட்சம் வரும். எனக்கும் பிரதிவாதிக்கும் தகராறு ஏற்படுவதற்கு முன்பு அருணா ஸ்டோரின் ஆண்டுக்கு மொத்த வரவுசெலவு (Turnover) இருக்கும் என்றால் ரூ.20 இலட்சம் இருக்கும். 1980ம் ஆண்டு முதல் அருணா ஸ்டோர்ஸ் வரவுசெலவு கணக்கு மற்றும் வருமானவரி, GST உள்ளிட்ட வரவு செலவு கணக்குகளை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அருணா ஸ்டோரில் என்னென்ன பொருட்கள் விற்பனை செய்து வருகிறோம் என்றால் கல்வி சம்மந்தப்பட்ட பேனா, பென்சில்கள், நோட், புக் போன்ற கல்வி சம்மந்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்கிறோம். எந்தெந்த கடைகளில் இருந்து என்னென்ன பொருட்கள் வாங்கி வந்தோம் என்பதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் அந்தந்த வருடத்தில் கணக்கை முடித்துவிடுவோம் என்றால் இல்லை. வருமானவரி கணக்குகளில் அருணா ஸ்டோரில் இருந்து கிடைத்த வருமாணத்தை வைத்துதான் என் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் மற்ற இலக்க சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதை காண்பித்துள்ளோமா என்றால் காண்பித்துள்ளோம். தற்போதும் அருணா ஸ்டோர் சீனிவாசன் செட்டியார் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, என் பெயரிலும், என் அண்ணன் கோவிந்தராஜன் பெயரிலும் உள்ளது. அருணா ஸ்டோர் நடந்து கொண்டிருக்கும்போது நான் தனியாக அருணா ஸ்டோரில் உள்ள ஸ்டாக்குகளை வைத்து அருணா நோட்புக் என்ற கடை ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல, என்னுடைய எல்ஐசி பணத்திலிருந்து ஆரம்பித்தேன். அருணா நோட்புக் என்னுடைய பெயரில் GST உள்ளது. அருணா நோட்புக் கடை அருணா ஸ்டோருக்கு பின்புறம் 100 மீட்டர் தொலையில் உள்ளது என்றால்

சரிதான். அருணா ஸ்டோர் நிறுவனம் வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கும்போது அருணாநோட்புக் என்ற கடையை ஆரம்பிப்பதற்கு என்ன காரணம் என்றால் சிறிய கடை என்பதாலும், போதுமான சரக்குகளை வைக்க முடியவில்லை என்பதால் ஆரம்பித்தேன். அருணா ஸ்டோரில் என்னுடைய உழைப்பு எதுவும் கிடையாது என்றும், என்னுடைய முதலீடு கிடையாது என்றும் அருணா ஸ்டோருக்கு போட்டியாக அருணா ஸ்டோரில் உள்ள சரக்குகளை வைத்து அருணா நோட்புக் என தனியாக கடை ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. அருணாநோட்புக் கடையில் இருந்து வரும் வருமானத்திலும் பிரதிவாதிக்கு பணம் கொடுத்துள்ளேன். எந்த வருடத்திலிருந்து கொடுத்து வந்தேன் என்றால் 2004 ம் ஆண்டு முதல் 2018 ம் ஆண்டு வரை கொடுத்துள்ளேன். பிரதிவாதிக்கு அருணா நோட்புக் கடையில் இருந்து வரும் வருமானத்தில் பங்குதாரர் என்ற முறையில் கொடுத்தேனா என்றால் இல்லை, என் அண்ணன் மகன் என்பதால் கொடுத்தேன். பிரதிவாதி என் உடன் பிறந்த அண்ணன் மகன் என்றால் சரியல்ல. எனக்கு சகோதரர்கள் முறையில் 2 அண்ணன்களும், 3 அக்காக்களும் உள்ளனர். அருணா நோட்புக் வருமானத்தில் இருந்து பிரதிவாதி தவிர இதர சகோதர சகோதரிகளுக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. அவர்கள் ஏற்கனவே பங்கை பிரித்து சென்றுவிட்டதால் கொடுக்கவில்லை. அருணா ஸ்டோர்ஸ் சரக்குகளில் இருந்து அருணாநோட்புக் கடை ஆரம்பித்ததால்தான் நான் பிரதிவாதிக்கு அருணா நோட்புக் கடையில் வந்த வருமானத்தை கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. அருணா ஸ்டோர் மற்றும் அருணா நோட்புக் கடைகளை இந்த வழக்கில் சொத்தாக சேர்க்கவில்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.